# திரு நின்ற ஊர்

**தின்னனூர்:** இவ்வூர் சென்னை மாநகருக்கு அருகில் இருக்கிறது. திரு நின்ற ஊர் என்ற சொல் நாளடைவில் மருவித் தின்னனூர் என்று வழங்கப் படுகிறது. இது திருமங்கை யாழ்வாரால் பாடப்பெற்ற திவ்வியதேசப். திருமகள் நிலையாக வாழும் ஊர் என்பதை ஊரின் பெயரே கூறுகிறது. ஊருக்கு அணித்தாய் மிகப் பெரியதோர் ஏரி அமைந்துள்ளது. ஏரியின் கரையில் இராமன் ஸன்னிதி இருக்கிறது இங்கு எழுந்தருளி இருக்கும் இராமனை 'ஏரி காத்த இராமன்' என்று கூறுவார்கள். வருணதீர்த்தம் என்ற பெயரோடு ஒரு குளமும் அமைந்திருக்கிறது. இவ்வூரிலிருக்கும் ஸன்னிதியில் பத்தராவிப் பெருமாள் எழுந்தருளி இருக்கிறார். தாயாரின் பெயர் என்னைப் பெற்ற தாயார் என்பதாகும். இந்த ஸன்னிதி திருமலை–திருப்பதி பெரிய கேள்வி ஜீயர் ஸ்வாமியின் ஆதிக்கத்தில் விளங்கி வருகிறது. திருவாராதனமும் உத்ஸவங்களும் குறைவற நடைபெறும் திவ்ய தேசம் இது.

# ஸ்தலசயனத்துறைவார்

**உடலும் உயிருமானான்:** பகவான் அடியார்களை உயிராகச் சருதுகிறான். கண்ணன் பாண்டவ தூதனாகத் துரியோதனனின் அவைக்களத்திற்குச் சென்றான். 'பாண்டவர்கள் எனக்கு உயிர் என்பதை 'மம ப்ராணா ஹி பாண்டவா:' என்று வெளிப்படையாகவே கூறினான். ஒவ்வொருவரும் தம்முயிரைப் பாதுகாப்பது போல் பாண்டவர்களைக் காப்பாற்றினான்; அவர்களுக்கு நன்மையே செய்தாள்; பாரதப்போர் முடித்து வெற்றியைத் தேடித் தந்தான். 'என்னிடம் அன்பு கொண்டவர்கள் என் உயிர் போன்றவர்கள்' என்பதைச் செயலில் காட்டினான்.

அடியார்கள் எம்பெருமானை உயிராகக் கொண்டவர்கள் இலக்குமணனும் பிராட்டியும் இராமனையே உயிராகக் கருதினார்கள். இராமன் வனத்திற்குச் செல்ல முடிவு செய்தான். தங்களையும் அழைத்துச் செல்ல வேண்டும் என்று இவர்கள் வேண்டினார்கள். இவ்வேண்டுகோளை ஏற்பதில் இராமன் சிறிது தாமதித்தான் 'இராம! உன்னை விட்டுப் பிரிந்தால் நாங்கள் உயிர் நீங்கியவர்களாக ஆவோம்' என்று இலக்குமணன் கூறினான். தசரதனும் இராமனை உயிராகக் கருதினான். ஆழ்வார் பகவானை 'உயிராய எங்கார்வண்ணனே!' என்கிறார். இவ்வூரிலுள்ள பெருமான் பக்தர்களுக்கு உயிராக இருப்பவன். பெயருக்குப் பொருத்தமானவன்!

தாயே! நீயே என்னைப் பெற்ற தாய்!; தாய் மக்களிடம் அன்பு கொண்டவள்; பாசம் மிக்கவள்! ஒரு பொருளை மிகவும் விரும்பும் போது அதிலுள்ள குற்றம் தோன்றாது. ஒரு பொருளை வெறுக்கும் போது அதிலுள்ள குணம் (நற்பண்பு) தோன்றாது' என்று பெரியோர் கூறுவர். தாய் தம் மக்களிடம் குற்றம் காண மாட்டாள். தன் மகன் குற்றமுள்ளவனாயினும் அவனை நல்லவனாகவே கருதுவாள். அது தான் தாய்ப் பாசம்! ஆயர்பாடிப் பெண்கள் அசோதையிடம் கண்ணன் மீது அடுக்கடுக்காகக் குற்றங்களைச் சாட்டினாலும் அசோதை அவற்றைப் பொருட் படுத்தவில்லையே! தன்மகன் நல்வழியில் செல்லாதவனாயினும் நல்லவர்களைப் போல் நன்மை பெற வேண்டும் என்று நினைப்பவள் தாய்.

மகாலக்ஷ்மியை 'லோக மாதா' உலகத் தாய் என்கிறோம். நாம் அவளை நினையாவிடினும், அவள் நம்மையே நினைக்கிறாள். தாய் என்ற சொல்லுக்கு ஏற்ப 'வாத்ஸல்யம்' கொண்டவள். எல்லோரும் நலமாக வாழ வேண்டும் என்று நினைப்பவள். பகவானிடம் புருஷகாரம் செய்து (சிபாரிசு செய்து) ஒவ்வொருவரையும் உய்விக்க வேண்டும் என்று நினைத்தே இவ்வூரில் (திருநின்றவூரில்) எழுந்தருளி இருக்கிறாள்! பக்தர்களின் ஆவி

யாகிற எம்பெருமான் அடியார்களைக் காப்பதற்கு உறுதி கொண்டுத் தயாராக இருக்கிறான். அவனுக்கு அவ்வாய்ப்பை அளிக்காமல் இவள் மக்களின் முன்வந்து நிற்கிறாள். அச்சம் நீக்கித் தன்னருகில் அழைத்துக் கடாக்ஷிக்கிறாள்; பத்தராவி எம்பெருமானின் அருளைப் பெற்றுத் தருகிறாள். ஸ்ரீராமாநுஜர் ஸ்ரீரங்க நாச்சியாரை 'அகில ஜகந்மாதரம்' என்று கூறியும் திருப்தி அடையாமல் 'அஸ்மந் மாதரம்' என்று அருளிச் செய்தார். இவ்வூரிலுள்ள தாயாரும் லோக மாதாவாக இருந்தாலும், 'என்னைப் பெற்ற தாயார்' என்று ஒவ்வொருவரும் அன்போடு கூறிக் கொண்டாடும்படியன்றோ வீற்றிருக்கிறாள்! நீயே என்னைப் பெற்ற தாயார்!

**முன்னவன் பின்னவனானான்:** சென்னைக்கு மிகவும் அருகில் பச்சை வாரணப் பெருமாள் கோவில் (பேட்டை) என்றொரு கிராமம் இருக்கிறது. அங்கே அனந்த நாராயண தீக்ஷிதர் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் ஞானமநுட்டானங்களில் சிறந்தவர். பூமி நாச்சியார் என்பவள் இவருடைய மனைவி. பூமி நாச்சியார் ராமாநுஜரின் பெரிய தங்கை. இவர்கள் இல்லறத்தை நல்லறமாக நடத்தி வந்தனர். இவருடைய திருவாதாரனப் பெருமாள் இராமன். மக்கட்பேறு இல்லாமையால் வருந்திய இத்தம்பதியர் திருவேங்கடமுடையானை ஸேவித்து, அவனருளால் புத்திர பாக்யத்தைப் பெறநினைத்தனர். திருமலைக்கு (திருப்பதிக்கு) யாத்திரையாகச் சென்றனர். செல்லும் வழியில் ஒருநாள் இரவு இவ்வூரில் (திருநின்றவூரில்) தங்கி இருக்க நேர்ந்தது. ஏரிகாத்த இராமன் ஸந்நிதியில் தங்கினர்.

இராமன் அன்றிரவு அனந்த நாராயணனின் கனவில் தோன்றினார். 'மக்கட்பேறு வேண்டி வேங்கடம் செல்ல வேண்டாம், நாமே உமக்கு மகனாகப் பிறப்போம். என் தம்பி லக்ஷ்மணன் ஸ்ரீபெரும்பூதூரில் பிறந்து இளையாழ்வான் என்ற பெயரோடு விளங்குகிறான். நாம் உமக்கு மகனாகப்

பிறந்து அவனை அடுத்து உலகை உய்விப்போம்' என்று கூறி மறைந்தான் அனந்த நாராயணரும் பேட்டைக்குத் திரும்பினார். கனவு பலித்தது. ஸ்ரீமுக வருஷம் சித்திரை மாதப் புனர்வஸு நக்ஷத்திரத்தில் சொன்ன சொல் தவறாத இராமன், இளையாழ்வாரின் சகோதரி குமாரனாக அவதரித்து 'முதலியாண்டான்' என்று பெயர் பெற்றார். இவ்வாறு இலக்குமணனுக்கு முன்னவனான இராமன், லக்ஷ்மண முனிக்கு (ராமாநுஜருக்கு)ப் பின்னவனாக ஆனான்.

**நோய் தீர்க்கும் மருந்து :** பரமனைப் போற்றும் குலத்தில் உதித்தாள் ஒரு பெண்! திருநின்றவூர் எம்பெருமானின் குணங்களைப் பக்தர்கள் வாயிலாகக் கேட்டாள். அவனைத் தனக்கு உயிராக நினைத்தாள். அவனோடு கலந்து உறவாட எண்ணினாள். அவ்வாறே நடைபெற்றது. எம்பெருமான் பிரிந்து சென்றான். இவள் கவலையுற்றாள். நெஞ்சு அவனையே நினைத்தது; வாய் அவனையே வெருவியது. உடல் பிரிவாற்றாமையால் வாடியது. கைவளை நெகிழ்ந்தன!

இந்நோய்க்கு மருந்து யாது? இவளை எப்படிக் காப்பது தாய் தந்தையர் திகைத்தனர்! தோழியர் துடித்தனர்! மருத்துவர் நோய் தீர்க்கப் போராடினர். மாந்திரிகர் முணுமுணுத்தனர். நோய் குறையவே இல்லை.

மருந்தும் மருத்துவனும் பரமனே! அவனாலன்றி வேறு எவராலும் இந்நோய் தீராது என்று பெண் நினைத்தாள், தோழியை அழைத்தாள் 'தோழீ! ஏன் இந்த வீண் முயற்சிகள்! திருநின்றவூர்ப் பெருமான் பொன்னும் முத்தும் மணியும் போன்றவன். கருடவாகனனான அவனை என்னிடம் அழைத்து

வாருங்கள். அப்போதே என் மனநோய் தீரும்' என்றாள். மையலேற்றி மயக்கும் அழகுடையவன் திருநின்றவூர் நித்திலம்.

> **சீரறிந்து தோழிமீர் ! சென்று கொணர்ந் தெனக்குப்**
> **போர முலைமுகட்டில் பூட்டுமினோ நேரவுணர்**
> **பொன்றவூர் புட்கழுத்திற் பொன்னை மாணிக்கத்தை**
> **நின்றவூர் நித்திலத்தை நீர்.**

நூற்றெட்டு திருப்பதி. அந்தாதி. 8

— —